A. M. D. G.

# ST. MARY'S SONGS

by

S. P. SARANGAPANI,
Panjampatti.

Printed at
Sri Ramanujam Press,
West Masi Street,
Madura.

923.

*Price Annas 4.*

Q6:417
N23
149680

சேசுமரிசூசை துணை

# அர்ச்சயசிஷ்ட தேவமாதாவின் பக்திரச பாமாலிகை.

இஃது

S. P. சாரங்கபாணி அவர்களால்

இயற்றப்பட்டு

மதுரை ஸ்ரீராமாநுஜம் அச்சாபீஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1923

[இதன் விலை அணா 4.

# மதிப்புரை.

---

அறிவிற்சிறந்த பாவலர் பலர் தோன்றி செவிக்கின்பந் தரும் பாக்களையியற்றி உலகத்தை உய்ப்பிக்கும் இக் காலத்தில் எமது நண்பராகிய S. P. சாரங்கபாணியவர்களும் இத்துறையில் இறங்கி இதம் செய்துவருவது அதிசயமன்று. இவர் இயற்றிய இப்பாமாலிகையினுள் பாட்டுகளெல்லாம் பெரும்பாலும் படிப்பதற்கு உற்சாகமாகவும் கேட்பவர்கட்கு இன்பமாகவும் இருக்கின்றன. இவர் இந்நூலிற் சொரிந்து உள்ள சொற்பொழிவுகள் வைராக்கிய பக்திக்குச் சிறந்த சாசனமாகுமென்பதிற் சந்தேகமில்லை. இவரது போக்கைக் கவனித்த பெரியோர் பலர் இவர் பிற்காலத்தில் சாஸ்திர விற்பன்னரும் ஆயுர்வேத நிபுணருமான ஸ்ரீ தி. அப்பாவு ஆசாரியார் யென்ற இவரது பெரியதந்தைபோல் கீர்த்தியும் யும் சிறப்பும் பெற்றுவருவாரென்று திண்ணமாய்க் கூறுகிறார்களானதால் இவரைப்பற்றி நாம் விவரமாய்க் கூறுவதற்கில்லை. பொதுவாக இந்நூல் உத்தம நேசபக்தி நிறைந்த

ரோமான் கத்தோலிக் கிறிஸ்துவர்களுக்கு இன்றியமையாத பலனைத் தருமென்பதிற் கிஞ்சிற்றும் ஆக்ஷேபணையில்லை. ஆதலால் இவரது பாக்கள் எங்கும் பரவுவதற்கும் இவர் நீடூழி வாழ்வதற்கும் எல்லாம் வல்ல இறைவனது திருவருளை மன்றாடுவோமாகவும்.

இப்படிக்கு,

M. V. அரியநாயகம் பிள்ளை,

மதுரை. 23—5—23

# பிதாவின் துதி.

காக்ஷிகண்காக்ஷியே யென்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி

வந்தருள்வாய் பிதா—வானுலகத்திருந்து (வந்)

அநுபல்லவி

சந்ததமுன் மைந்தனுக்கு உந்தன்பாதந்தந்தருள (வ)

சரணம்

ஆறுலக்ஷணமமைந்த ஆதியான நாத னே
கூறுமடியார்கள்வினை தீர்த்தருளும் போத னே
வேறுதுணை யில்லையும்மை வேண்டினேன் சகாயனே
வித்தகனே இத்ததிநீ வாராய்-உம்மை
சித்தமேப ணிந்துவந்தோம் சீராய்-மிக
உத்தமனே உன்பதத்தைத் தாராய்
முத்தமிழானந்தனே நத்தித்துதிசெய்திட
சுத்தமனத்தோடே சுகித்துப்பாவமோடிட (வந்)

## அர்ச்சயசிஷ்ட தேவமாதாவின்

# சேசுநாதர் துதி.

மூர்த்தியாய் வந்துதித்த மோதிலால் நேரு யென்ற மெட்டு.

பல்லவி

கர்த்தனாய்வந்துதித்த காருண்யநாதா
நாதா நாதா நாதா (கர்)

அநுபல்லவி

கீர்த்திபெருந்தாவீது கோத்திரக் கீதா
கீதா கீதா கீதா (கர்)

உத்தமி மாமரியாள் உந்தியாலே பிறந்த
வித்தகசேசுவென்னும் விமலனே போதா
போதா போதா போதா (கர்)

சிந்தைமகிழ்ந்திடவே இந்தவேளை பணிந்தேன்
சந்ததம்வந்தருள்வாய் சந்திய வேதா
வேதா வேதா வேதா (சர்)

உன்னிருதயமீழல் உற்றோரில் நானொருவன்
என்தயக் கங்கண்டுநீ இருப்பதும் வாதா
வாதா வாதா வாதா (கா)

சரிசரிசாமுத்ரிகாலக்ஷணம் யென்ற மெட்டு.
இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலனை பக்தர்கொண் டாடும்யேசு (பால)

அநுபல்லவி.

பகமேகவே கனியாயுதித் தருள்மாமரி நெறியேவரு( )

சரணம்

மாட்டடை குடிலடுத்து மாக்ஷியுற்ற நாதனே
கேடடைந்த மானிலத்தை மீட்கவந்த நீதனே
புனித பாதனே அருள்
புரியும் வேதனே. ததி
புகழாகவே தயையேமிகு
குருவேமனு உருவாகிய (பா)

தன்னையே விருந்ததாகத் தந்தமனு வேலனே
இன்னமும் பலியதாக இருந்துவாழும் சீலனே
மரித்த லோலனே உயிர்த்
தெழுந்த நூலனே இனி
உரித்தாகவே கருத்தாயிரு
தயத்தா லெலமை யணைத்தாளும் நற் (பா)

---

பாண்டியனின்ற மீனுகஷி யென்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சேசுவின் நாமமேஜெயமே எந்நாளும்
நமக்கில்லை பயமே (சே)

அநுபல்லவி.

பாசமாய் அவரைப் பணிமனமே அநுதினம்
அண்டிடு கனமே (சே)

தொஹைறா

அர்ச்சயசிஷ்ட தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளா
கிய சுதனுகிய சர்வேஸ்பரன்

சிஷ்டரக்ஷிப்புக் கர்த்தரான தேவாதிதேவன் திவ்யகற்
கருணையிலெழுந்த சற்பரமண்டலேஸ்பரன்

பல்லவியெடுப்பு.

மாமரியாள்மகிழ் டாலன் உல்கை
ஆண்டிடும் சீலன் (மா)

அநுபல்லவியெடுப்பு.

ஆதரித் தருளும் ஜெயநூலன் நன்மையே
அருளுங் கனி லோலன் (சே)

தொஹைறா

ஆதித்தாய் ஆதிதந்தையின் சதியைச் சேர்திருந்த வந்தார்
ஜோதியாய் நின்றவர் நானிலத் தோர்க்காய்த் திருச்
சபையைத் தந்தார்

பல்லவியெடுப்பு

பெத்லேகேம் தனிலுதித்தோனே மனிதர்க்காய்
உயிர்கொடுத் தோனே (பெ)

அநுபல்லவி யெடுப்பு.

தத்துவம் நிறைந்த சீமானே புவியைக்
காக்குங் கோமானே (சீச)

செந்தியில்குமரவேளுண்டு யென்ற மெட்டு.

இராகப்-சுருட்டி-தாளப்-ஆதி.

பல்லவி

அன்னைமாமரியின்பாலன்-நம் சேசுநாதன் (அ)

அநுபல்லவி

ஆதியிலேபிதா நீதிவழுத்திய (அ)

ஜோதியொளி யணி தீதில்லா மாமணி
பாதிமதியை யுடைடனவே கனி (அ)

ஜென்மபாவமே தன்மையிலறி யா
கன்னித்தனமே உன்னத நெறியாள் (அ)

பாரமே சிலுவை தோளினிற் றாங்கிய
பாலன் வருவதைக் கண்டுமே எங்கிய (அ)

உத்தமி பரிவை நத்தித் துதிக்க
வித்தக வரமே சித்தித் தருளும் (அ)

சரணம்.

வானுல கத்திருந்து
வன்பன மேசிறந்து
மூந்தவே தான்பிறந்து
மோக்ஷமதைத்திறந்து

சந்ததம் சாரங்க பாணிபு கழ்ந்திட
விந்தை யுகந்து வந்து விளங்கிடும் (அ)

மைக்கேந்தபேதருபான் என்ற மெட்டு.

இராகம் தேசிக-கமாஸ் தாளம் ஆதி

பல்லவி

அன்னைமரி பாலனே—உன்னை வேண்டினேனே (அ)

அநுபல்லவி

ஆதரவெனக் காருமில்லையே
கோரிவந்தேனே பாருமெந்தனை (அ)

சரணம்

மாமுனி சூசைமகிழ் மன்னா எனக்குவரம்
மானிலந்தனி லே
தாவேணும் மண்மேலே
இத்தரை மீதினிலே நத்தியே பாவமேக
சுத்தாவதாரஞ்செய்த—மனுவேலா
ஆதரவெனக் காருமில்லையே
கோரிவந்தேனே பாருமெந்தனை (அ)

பாவமதால்மெலிந்தேன் பக்தியுடன் துணிந்தேன்
பதரினேன் நானே-
கண் பாரும் ஜீமானே.
பாதிமதியணியும் ஜோதிமாமாமரியின்
சுகந்தரனுய்விளங்கும்—சுகபோதா
ஆதரவெனக் காருமில்லையே
கோரிவந்தேனே பாருமெந்தனை (அ)

---

# தேவமாதாவின் துதி.

வந்தேமாதாம் ஜெய என்ற மெட்டு.

பல்லவி

தாயே மாமரி எம்மை நீயே ஆதரி (தா)

அநுபல்லவி

ஜெய ஜெய பூரணி ஜெய ஜெய பூரணி
ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய (தா)

### சரணம்

ஆத்மீகர் யாவரும் அனுதினம் போற்றிடும்
அகிலத் திற்குந்தா யெனப்புவி சாற்றிடும் (தா)

மாமுனி சூசையை மணந்த ஒய்யாரி
மானில மேபுகழ்ந் தேற்றும் சிங்காரி (தா)

ஆசியின் தலையை நசித்த நற்றாயே
ஆர்த்த மாமரியே நானுந்தன் சேயே (தா)

குகைதனிற் காக்ஷி கொடுத்ததோர் மாக்ஷி
பகைவராம் பதிதரை அழித்திடும் சூக்ஷி (தா)

உந்தனின் திருஇரு தயத்தையே தாராய்
ஊழ்வினை யையகற்றி யனுதினங் காராய் (தா)

கோந்தாரும்பூங்கணை யென்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

பல்லவி

மாமரியாள் பாதமே பணிவாய்மனமே
கனிவாய்கிதமே அவள் தான் சதமே-திரு (மா)

அநுபல்லவி.

சேசுவின்தாயைத் தினந்துதிப்பர்யே

மாசறப் புவி வந்தாள்
நமக்காகச்சேசுவைத் தந்தாள்
பிருபாசமேநமக்கு கந்தாள்

ஜென்மதோஷமில்லாததேவி பண்பாயவளை நீசேவி

திக்குளோர்மெச்சிடப் பக்குவமாகவே

பாவணிமரி மணியே
நமக்காகவுதித்த கனியே
நாம் சேவித்திடுவோ மினியே (மா)

சரணம்

கன்னிபெர்ஞறு உன்னிமனம் பூர்த்து
உதித்தனள் குகை காக்ஷி
மிகமாக்ஷி நல்ல ஆக்ஷி
அங்கு ஜோதியாமொளிவீச
நல்ல சேதிதந்தனள் பாச
பாதிமதியையே பாதத்திற் கொண்டனள்
பாரில்புகழேறப்பெறும் சூசைமுனிய வரின்ராணி (மா)

பாலாபிஷேக யென்ற மெட்டு.

பல்லவி

ஜோதியொளியான நாதனுஞ்சேயே
பாதிமதியணி யுந்திருத் தாயே (ஜோ)

அநுபல்லவி

வாதித்து உந்தனை வந்தோமே நாங்கள்
சோதிப்ப தும்மழகல்லவே யெங்கள் (ஜோ)

தொகையறா

அநித்தியமான உலகவாழ்க்கையில் அருவருப்புக்
கொண்டோம்
இனி நித்தியமான மோக்ஷ சாதனத்திற்காக
உன் திருமுக தெரிசனங் கண்டோம்

சந்தமுடுகு

மாமுனி சூசையை மணந்த ஒய்யாரி
ஜெயமிகப் பெற்றுமே சிறந்த சிங்காரி

பல்லவியெடுப்பு

திக்குளோர் மெச்சிடும் பக்குவம் பூணி
எக்காலும் எங்களை ஆண்டிடும் ராணி (ஜோ)

தொகையறா

சாத்மீக மின்றியே தாரணியி லுழன்று நின்றோம்
ஆத்மீக விசாரத்தைப் போக்கி அருளுவா யன்றோ ()

சந்தமுடுகு

அநுதின மும்உம்மைப் பணிந்துவந் தோமே
ஆதரித் திடவேமொ ழியுந்தந் தோமே

பல்லவியெடுப்பு

ஆதிப ராபரன் அவனியி லுதிக்க
சேதியை ஸ்பிரீத் சாந்துவளிக்க (ஜோ)

---

புதுமைச்சித்திர மென்ற மெட்டு.

சுந்தரிமரி யாயேநீ வருவாய் அநுதினமும்
சுகிர்தமுட னேஉன தருள்வாய் இந்த

சூதுசூழ்புவி மீதி லெந்தனை
ஆதரிக்கவே வேண்டி னேனுனை (சுந்)

பாரிலுந்தனைத் தேடி வந்தேனே பகலிரவு
பாவச்செய்கைய தால்மெ லிந்தேனே இனிப்

பாடியேவுனை நாடிப்பணிய
தேடிவந்தேனே மோடியேனினி (சுந்)

அமல உற்பவ மான சிங் காரி சூசையின்பாரி
அகிலமும் புகழ்ந்தேற்றுமொய்யாரி என்
ஆவி யேபோகும் வேளை தனிலே
கூவி நானழைப் பேனே மேவியே (சந்)

கற்பெனுங் கரைகண்டவள் நீயே கவனமுடன்
பொற்பதந்தனை வேண்டினேன்சேயே இந்த
வேளையினுந்தன் தாள்பணிந்தேனே
பாழ்படுஉல காழியின்று (சந்)

பாலனேபழனி யங்கிரிவேலனே யென்ற மெட்டு.

பல்லவி

அன்னையே அனுதினம் வேண்டினே னன்னையே(அ)

அநுபல்லவி

ஆருந்துணையில்லை அவனியில் நீயே
அனைவரையும் இன்று வந்துகார்ப்பாயே (அ)

சரணம்

உந்தனின் திருஇரு தயத்தையே தேடி
சொந்தமெனவந் தோமொன்று கூடி
வந்தருள் மாமரி யாயேநீ யோடி
வர .ரு ளனு தினம் (அ)

சேசுவின் தாயென வேமகிழ்ந் தோமே
மாசணுகா வுன தடிபணிந் தோமே
பாசமுடன்வணங்கிடத் துணிந் தோமே
பக லிர வனு தினம் (அ)

அமலஉற்பவ மாமரீ யாயே
அண்டினோம் பாலர்கள் வந்துகார்ப் பாயே
அவனியிலே வுன தருள்தரு வாயே
அடைக்கல மனு தினம் (அ)

பாண்டியனின்ற மீனாக்ஷி யென்ற மெட்டு.

இராகம் அமீர்கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி

பிரிய தத்தலினாலே பூரண மானநீ வாழ்க (பிரி)

அநுபல்லவி

நாரியர் மாய்கையினின்று எந்நாளும் மனிதரைமீட்க()

தொகையறா

முட்களின் நடுவில் வாடாத லீலியே
வந்தருள்வாய் தாயே
வெட்கியே பாவமதால் பாரினில்
மெலிந்தேன் நானுந்தன் சேயே

பல்லவி யெடுப்பு

கன்னிமை குன்றிடாத்தேவி உனைநான்
உன்னினேன் மேவி (க)

அநுபல்லவி யெடுப்பு

இன்னமும் ஏங்கினேன் பாவி இவ்வேளை
இரங்கு சஞ்சீவி (பிரி)

தொகையுறு

கூவியே அழுதுநிற்கும் குழந்தையைக்
காப்பதுன் கடனே

ஆவியே போகும்வேளை தனில் அமலன் சேசுவேல்
வந்தருள்வாயுடனே

பல்லவியெடுப்பு

அநித்திய வாழ்க்கையைநம்பி நானலைந்தேன்
ஆண்டரு ளம்மா (அ)

அநுபல்லவியெடுப்பு

கொதிக்குந்தீ நரகினில் நின்று நான்பிழைக்க
கைகொடு சும்மா (பி)

கபரந்தோரஹான் யென்ற மெட்டு.

பல்லவி

அன்னை மாமரி அண்டினேனெனையாதரி (அ)

அநுபல்லவி.

உன்னையல்லால் வேறு துணை
நன்யமாய் யாருங்காணேன் (அ)

சரணம்.

அமல உற்பவ விமலியே நீயே
கமல பொற்பாதந் தனைத்தரு வாயே
விமலஞ்சே சுவையீன்ற நெறியுணர் தாயே
நித்தமுமுனைப்பணிந்தேன் சித்தமகிழ் வாயே

சாந்தமே வுருவாய் ஜனித்தபூ ரணியே
நொந்திட்ட பாலரைக் கார்க்குங்கா ரணியே

சொந்தமென வந்தோ முனைப் பேணியே
துரிதமாய் அணைத்தருள் வாயேநீ ராணியே (அ)

துஷ்டப்ப சாசின்போ ராட்டமெந்த னையே
கஷ்டப்ப டுத்துவ தாலெந்தன் அன் னையே
சிஷ்டமு டனருள் வாயென உனையே
இஷ்டமு டனனு தினப்வேண்டினேன் சேயே(அ)

---

அம்பாள் மதுரை மீனாக்ஷி யென்ற மெட்டு.

கண்ணிகள்

அன்னை கன்னிமரியே நீயே நான்
அனுதினம் பணிசேயே அண்டினேன்
ஆதரிப்பாய் தாயே
ஆண்டருள்செய் வாயே... ஆண்... ஆண்... (அ)

144680

வானோர்க் கரசியே சிங்காரி உனை
வாழ்த்தினேன் ஒய்யாரி இவ்வேளை
வந்தருள்வாய் நாரி
வரமருள் கெம்பீரி...வர...வர... (அ)

ஊசியின் தலையைத் தானே அன்று
நொருங்கமிதித்த மானே நோயினால்
நொந்துமே மெலிந்தேனே
நொடியதில் நானே...நொ...நொ... (அ)

---

இராகம் தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

மரிமல ரடிதொழு வாய் மங்கள
லங்கிர்த கங்கண சங்கைவி ளங்கிமு ழங்கிடு தங்கக்கல்()

மதிமிதி நிதியெனத் ததிபதி புகழ்ந்திடும் (ம)

ஜென்மவினை தோஷமில்லாத்
தன்னை விலையத் தான்வகித்த (ம)

அநுபல்லவி.

பவமேயறியாதநற் றூடகியே இந்தப்
பார்தனிலே நேர்மையுடன் சீர்மிகுத்தே பேர்வளர (ம)

சரணம்.

முட்களின் நடுவில் வாடாத லீலி
நட்புகொள் வோர்தம்மை நாடும் நன் னாலி
நயமுட னிதுதநி பயமது வில கிட (ம)
சதியது பறந்திட துதிததி மிகுந்திட (ம)
திருமகன் தனைத்தினம் குருவெனப் பணிமனம் .(ம)
விண்ணுலகோர் வாழ்த்தித் தினம்
நன்ன டங்கொண் டாடி வரும் (ம)

மதனுகமபோக யென்ற மெட்டு.

வண்ணச்சந்தம்.

பல்லவி.

அலைகடலொளி மீனெனவே ததியேபதி யேபுகழும்
அனைமா மரியே நினையே துணையாய்க்
கருதினேனே யனுதினமும் (அலை)

அநுபல்லவி.

நிலையே யிலையே நிலமே கலையே பயில அருள்வாய்
பதியே நிதியே பதிமிதி தாயே (அலை)

சரணம்

தினமதி லுனையே நானே பவவினை விலகிடத் தானே
தித்திப்புறு தத்துவமாய் நித்தமுன்னையே பணிந்தேன்
சுத்தத்திரித் தத்துவத்தின்
வித்தகியாய் வந்துதித்த (அ)

தவமா நெறியே தானுணர் நேயே
பவமாய்கையினி லலைந்தேன் சேயே (அ)

மனுமகனுகிய சேசுமழலையை யனுதினம் மடிமேல்
மட்டிலடங் காதபக்ஷ திட்டமுடன் தான்வளர்த்தாய்
தொட்டிலிலுங் கட்டிலிலும்
விட்டகலாதே யிருந்தாய்
இட்டமுடன் துட்டர்பலர்
கொட்டிக்கட்டத் தான்விடுத்தாய் (அ)
அன்றியுங்கல் வாரிமலைக்
குன்றினிலே னின்றழுதாய் (அ)

நிறைமிக வாகிய குருசை பரனவர் தோளினிற் றுங்க
தன்மைபெற்று உன்முகமும் வாட்டமதி னுற்றிய ங்க

பெற்றவருன் முன்னிலையில்
நற்றயவு இன்றியேதான்
கற்றாணியின் கட்டிவைத்து
முற்றிலுமே தான்வதைத்தார் (அ)

இத்தனையும் எந்தனுக்காய்ச் சித்தமகிழ்ந் தேசகித்து
இரத்தமதைத் தான்பொழிந்து ரக்ஷித்தயென் னாண்டவனை

தாரணியி லேபணியா
தருதலை யானதினல்
தாயகியே சேயனென்னை
நேயமுடன் ஆதரித்து

தீயவழி விட்டகற்றித் தூயன்பாதம் சேர்த்திடுவோய் []

# பாப்பரசர்வாழ்த்து.

அப்பனுலாகே யென்ற மெட்டு.

இராகம் பார்வி தோடி - தாளம் ஆதி.

பல்லவி

ஜெய-ப்ரப்பரசரின் பெருமை இந்த
ஜெகமேபுகழ்ந்திடவே தகி
எடுத்துரைத்திடி லருமையருமை (பா)

அனுபல்லவி

திருச்சபைக் கதிபன் புவில்
திலகுமுயர்ந்த ஸ்தான தீபன்
திரீத்தத்துவத்தின் மகிமை தெரிய
பதித்த முத்திரைக் குகந்த சீல (பா)

தொகையறா

சேசுவின் ஸ்தானாதிபதி யாகையால்
சேவித்துப் போற்றுவோமே
பாசமுடனவரடியைத் தினமுமேநாம்
பாவித்து யேற்றுவோமே.

அநுபல்லவி யெடுப்பு

சாற்றியே புகழை நிதம்
சதமெனப்பணிவோமே தாளை
திரித்தத்துவத்தின் மகிமைதெரிய
பதித்தமுத்திரைக் குகந்தசீல (பா)

---

## மங்களம்.

அஸ்னுகாணு ஒய்ஸா யென்ற மெட்டு.

கண்ணிகள்.

எங்கும்புகழும் எங்கள்சேசு நாதருக்கு மங்களம்
பங்கமில்லா தேவமாதா மலரடிக்கே மங்களம்

சுந்தரந்து லங்குஞ்சூசை மாமுனிக்கே மங்களம்
அந்தரத்தி லுள்ளசகல அர்ச்சிஷ்டவர்கே மங்களம்
திருச்சபையின் மேய்ப்பஞன பாப்புவிற்கு மங்களம்
குருஸ்தானமேற் ருணிமார்கள் அனைவருக்கு மங்களம்
எந்தன்போஜகர் கே. வி. சவரி முத்தவர்க்கு மங்களம்
கொந்தசோதர கே. வி. சந்தியாகவர்க்கு மங்களம்
இந்தநூலை இன்பமுடன் ஏற்றவர்க்கு மங்களம்
நந்தமிழ்க்கி றிஸ்துவமக்கள் யாவருக்கும் மங்களம்

அர்ச்சயசிஷ்ட தேவமாதாவின்
பக்திரச பாமாலிகை முற்றிற்று.